TAMIL

# பாடசாலை வேளை புறம்பான தரமான காப்பைத் தெரிவு செய்தல்

## குடும்பங்களுக்குரிய தகவல்

### பாடசாலை வேளை புறம்பான காப்பு என்றால் என்ன?

பாடசாலை வேளை புறம்பான காப்பு பாடசாலை வயதை எட்டிய பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு முன் அல்லது பின், பாடசாலைக்கு மாணவர் வராத நாட்களில், மற்றும் பாடசாலை விடுமுறை நாட்கள் (விடுமுறைக் காப்பு) இல்/அல்லது கவனிப்பு வழங்குகிறது. பாடசாலை வேளை புறம்பான காப்பு சிறுவர்களுக்கு ஒரு பல்வகைப்பட்ட கண்காணிக்கப் படும் விளையாட்டு வாய்ப்புகளும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளையும் வழங்குகிறது. இவற்றை ஆதரவளிக்கும் மற்றும் தளர்வுடைதுமான சுற்றாடலில் நடைமுறைப் படுத்துகிறது. சேவைகள் சில வேளைகளில் குறிப்பாக விடுமுறைக் காப்பில் சுற்றுலாக்களையும் ஒழுங்கு செய்யும்.

பாடசாலை வேளை புறம்பான காப்புப் பணியாளர்கள் ஒவ்வொரு பிள்ளையின் தேவைகள், விருப்புகள், மற்றும் திறமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பிள்ளைகளுடனும், குடும்பங்களுடனும் கலந்தாலோசித்துத் திட்டமிட்டு, பல வகையான நடவடிக்கைகளை வழங்குகன்றனர். இது சிறுவர்களுக்கு தெரிவுகளையும், சவால்களையும் அளித்து வாழ்கைத் திறன்கள், சுதந்திரம் மற்றும் நட்பு ஆகியவற்றை விருத்திசெய்ய உற்சாகப் படுத்துகிறது. பாடசாலை வேளை புறம்பான காப்புக்குச் சமூகமளிக்கும் சிறுவர்களின் வயதுக்கேற்றவாறு சுற்றாடல், மற்றும் அனுபவங்கள் சிறுவர்களுக்கு ஒருமுகப் பட்டதாகவும், வேடிக்கையாவும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் சிறுவர்கள் தீர்மானம் எடுப்பதில் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும்.

### நான் எவ்வாறு பாடசாலை வேளை புறம்பான காப்பைத் தேட முடியும்?

குடும்பங்கள் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலைத் தலத்தில் அல்லது அருகாமையில் ஒரு பாடசாலை வேளை புறம்பான காப்பு இருக்கிறதா என்று அவர்களது உள்ளூர் பாடசாலையைக் கேட்கலாம். குடும்பங்கள் வெற்றிடம் இருக்கிறதா என்றும், பாடசாலைக்கும் சேவைக்கும் இடையில் கண்காணிக்கப் பட்ட போக்குவரத்து நடைமுறை ஒழுங்குகளையும், அறியச் சேவையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

குடும்பங்கள் காப்பைத் தேடுவதற்கு உதவுமுகமாக தேசியச் சிறுவர் காப்பு அங்கீகரிப்புச் சபை (என் சி ஏ சி) ஒரு இலகுவாகத் தேடும் வாய்ப்பை எங்களது வலைத்தளம் (www.ncac.gov.au) மூலம் அல்லது என் சி ஏ சி யைத் 1300 136 554 இல் தொலைபேசியில் அழைப்பதின் மூலம் சிறுவர் காப்புச் சேவைகளின் பெயர்களைப் பெற வசதி செய்கிறது.

### நான் எதைத் தேட வேண்டும்?

உங்கள் சிறுவருக்கான காப்புச் சேவையின் தெரிவு பல வேறுபட்ட அம்சங்கள் சம்பந்தப்பட்டிருக்கும். அத்தோடு தங்களது பிள்ளைகளுக்கு தரமான காப்பைத் தேடும் குடும்பங்கள் தாங்கள் என்ன சிறந்த கேள்விகள் கேட்கவேண்டும் என்பதையும், எதைச் சிறுவர் காப்புச் சேவையில் தேடிப் பார்க்க வேண்டும் என்பதையும் உத்தேசிப்பதை உற்சாகப்படுத்தப்படுகிறது. அத்துடன் நீங்கள் உங்களைப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

- சேவை அங்கீகாரம் பெற்றதா? அதன் *அங்கீகாரச் சான்றிதழ்* மற்றும் *தரக் குணாதிசயம்* ஆகியவற்றைக் காட்டும்படி கேளுங்கள்.
- கவனிப்பாளர்கள் பிள்ளைகளுடன் மனமுவந்தும், நட்பாகவும் கதைப்பார்களா?
- எனது குடும்பத்துக்கு என்ன தொடக்கச் செயல்முறைகள் கிடைக்கும்? எனது பிள்ளையின் முதல் நாள் அன்று என்ன நடக்கும்?
- பணியாளர்களின் மாற்றங்கள் பற்றி எனக்கு எவ்வாறு அறிவிக்கப் படும்? எனது பிள்ளையைப் பற்றி நான் யாருடன் கதைக்க வேண்டும்?
- எனது பிள்ளை எவ்வாறு கண்காணிக்கப்படுவார்?
- எனது பிள்ளை என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுவார்? இந்த நடவடிக்கைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படப்படும்?
- எனது பிள்ளையின் நாளாந்த செயல்களைப்பற்றி எனக்கு என்ன அறிவுறுத்தல்கள் தரப்படும் அத்தோடு இது எவ்வாறு தரப்படும்?
- எழுதப்பட்ட திட்டம் ஒன்று பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறதா? திட்டத்தைத், திட்டமிடுவதிலும், மதிப்பீடு செய்வதிலும் எவ்வாறு எனது திட்டம் சம்பந்தப்பட முடியும்?
- எனது பிள்ளையின் தனிப்பட்ட அல்லது மேலதிகத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் திட்டம் எவ்வாறு செயலாற்றுகிறது?
- எனது பிள்ளையின் கருத்துகளும், அபிப்பிராயங்களும் எவ்வாறு செவிமடுக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்?
- கிடைக்கப்பெறும் விளையாட்டுப் பொருட்கள், கருவிகள் மற்றும் நடவடிக்கைகள் எனது பிள்ளை அவன்/அவள; இன் விருப்புகள் மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு தெரிவுசெய்யவும், தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இருக்குமா?
- கொடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் சாதனங்கள் வயது கூடிய பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டுவதாகவும், சவாலளிப்பதாகவும் இருக்கிறதா?
- உண்மையான வாழ்க்கைக்குத் தேவையான காரியங்களை ஆராயும் நடவடிக்கைகளில் பங்குபற்றும் வாய்ப்புக்கள் எனது பிள்ளைக்கு இருக்கிறதா? உதாரணமாக சுயச் சுகாதாரம் மற்றும் உணவருந்தும் வேளைகள்.
- எனது பிள்ளை சுறுசுறுப்பான கூச்சலிடும் விளையாட்டு மற்றும் அமைதியான விளையாட்டு ஆகியவற்றில் பங்குபற்றுவதற்குத் தேவையான இட வசதிகள் இருக்கின்றனவா?
- வெளியே அல்லது உள்ளே இருக்கும் சுற்றாடலும், கருவிகளும் கவர்ச்சியூட்டுவனவாக, பாதுகாப்பாக, தீங்கின்றி மற்றும் சுத்தமாக இருக்கின்றனவா?
- நடத்தை சம்பந்தமான வழிகாட்டும் கொள்கை என்ன? அத்தோடு கவனிப்பாளர்கள் பிள்ளைகள் சண்டைபிடிக்கும், அழும் மற்றும் ஒத்துழையாமல் இருக்கும் நிலைமைகளைக் எவ்வாறு கையாளுகிறார்கள்?
- எனது பிள்ளைக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? எனது பிள்ளையின் விசேடத் திட்ட உணவுத் தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப் படும்.
- குடும்பங்களுக்குரிய தகவல், கொள்கைகள், மற்றும் செயல்முறைகள் எழுத்தில் இருக்கின்றனவா? எனது குடும்பம் இந்தத் தகவல்களைப் எவ்வாறு பெற முடியும்?
- எனது பிள்ளைக்கு மருந்துகள் தேவைப்பட்டால் என்ன நடைபெறும்? எனது பிள்ளை கவனிப்பில் இருக்கும் போது சுகயீனமுற்றால் அல்லது ஒரு விபத்து ஏற்பட்டால் என்ன நடக்கும்?
- எனது பிள்ளை திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல் மற்றும் பாடசாலை விதிகளை மீறினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட என்ன செயல்முறைகள் இருக்கின்றன?
- ஒழுங்கற்ற நடத்தைகள் குறிப்பாகத் தொல்லை கொடுத்து அடக்குதலைச் சமாளிக்க ஏதாவது செயல் முறைகள் இருக்கின்றனவா?
- எனது பிள்ளை பாடசாலைக்குச் செல்லவும், பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பவும் என்ன ஒழுங்குகள் செய்யப்படடிருக்கிறது? எவ்வாறு இச் செயல்முறைகள் எனது பிள்ளைக்கு அறிவிக்கப்படும்?
- எனது பிள்ளை பாடசாலைக்கு செல்ல அல்லது வீடு திரும்பும் வேளைகளிலும், மற்றும் சுற்றுலா வேளைகளிலும் அளிக்கப்படும் போக்குவரத்துச் சேவைகளுக்கு என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் உத்தேசிக்கப் படுகிறது?

© National Childcare Accreditation Council Inc - June 2005,

மறு பக்கம் பார்க்கவும ->

## பாடசாலை வேளை புறம்பான காப்புத் தர உறுதிப்பாடு (OSHCQA) என்றால் என்ன?

OSHCQA பாடசாலை வேளை புறம்பான காப்பிலிலுள்ள பிள்ளைகளுக்கு உயர் தர கவனிப்பை வழங்கி அவர்கள் கல்வி கற்பதையும், வளர்ச்சியடைவதையும் முன்னேற்றுவதைக் குறிக்கோளாய்க் கொண்டுள்ளது. விளையாட்டு, சமூகப் பரிமாற்றங்கள், மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

OSHCQA இன் பரந்த குறிக்கோள் பாடசாலை வேளை புறம்பான காப்பிலிலுள்ள பிள்ளைகள் அவர்களது வளர்ச்சிக்குரிய எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய தூண்டுதலளிக்கும், நேர்மறையான அனுபவங்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றைப் பெறுவதை உறுதி செய்வதாகும். இது இதனைக் பாடசாலை வேளை புறம்பான காப்பின் தரம் என்ன என்று விளக்கியும் இத் தரத்தை அளப்பதற்கு ஒருவழியை அளிப்பதன் மூலம் செய்கிறது.

OSHCQA இன் தரங்களுக்கு தகுதியடையும் சேவைகளுக்கு NCAC அங்கீகாரம் அளித்து *அங்கீகாரச் சான்றிதழ்* வழங்கப்படும். இந்தச் சான்றிதழை அவர்கள் எடுப்பான வகையில் பார்வைக்கு வைக்கவேண்டும். அவர்களுக்கு ஒரு தரக் *குணாதிசயச் சான்றிதழும்* வழங்கப்படும், இது சேவையின் ஒவ்வொரு தரப் பகுதிகளினதும் சாதனைகளைக் காட்டும். குடும்பங்கள் இந்தச் சான்றிதழைப் பார்வையிடக் கேட்கலாம்

தரங்களின் அங்கீகாரம் காப்பின் 8 தரப் பகுதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இவை பிள்ளைகளுக்கு முடியுமான அளவு சிறந்த சேவைகள் வழங்குவதை உறுதி செய்யும்.

## OSHCQA இன் 8 தரப் பகுதிகள்

1. **சிறுவர்களுக்கு மரியாதை கொடுத்தல்** – பணியாளர்கள் சிறுவர்களின் பின்னணிக்கும், திறமைகளுக்கும் மரியாதை கொடுத்து வெளிப்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையும் அவர்களுக்கு தங்கள் மேலுள்ள நம்பிக்கையையும், சுய மதிப்பையும் விருத்தி செய்ய ஆதரவு அளிக்கிறார்கள்.

2. **பணியாளர்களின் பரிமாற்றங்களும் பிள்ளைகளுடனான உறவுகளும்** – பணியாளர்கள் தங்களுக்குிடையிலும். பிள்ளைகளுடனும் இருக்கும் உறவை விருத்தி செய்து பிள்ளைகள் தங்களது விளையாட்டு மற்றும் கவனிப்புத் தேவைகளைப் பெறுவதை உறுதி செய்கிறார்கள்.

3. **குடும்பங்களுடன் கூட்டுப்பங்காண்மையும் சமூக இணைப்புகளும்** – குடும்பங்களும் பணியாளர்களும் பரந்திருக்கும் சமூகத்துடன் இணைப்புகளை வளர்க்க ஒன்று சேர்ந்து வேலை செய்கிறார்கள்.

4. **திட்டமிடுதல் மற்றும் மதிப்பிடுதல்** – பணியாளர்கள், குடும்பங்கள் மற்றும் சிறுவர்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படும் பயன் வாய்ந்த திட்டமிடுதல் ஒவ்வொரு பிள்ளையின் தேவைகள், விருப்புகள் மற்றும் திறன்கள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் மீளாய்வு செய்யப் படுகிறது.

5. **விளையாட்டு மற்றும் வளர்ச்சி** – சேவைகள் ஒவ்வொரு பிள்ளையினதும் தனித் தன்மை வாய்ந்த தேவைகளை அடையாளங்கண்டு அவர்களது விளையாட்டுக்கு ஆதரவாகத் திட்டங்களை விருத்தி செய்கிறது.

6. **உடல்நலம், உணவு மற்றும் நலமாயிருத்தல்** – மையங்கள் நலமாயிருத்தல், ஆரோக்கியமாக உணவு உண்ணல், ஆகியவற்றை மேம்படுத்தவும், இதைக் கை கழுவுதல் மற்றும் நோய் தடுக்கும் மருந்துகள் ஏற்றல் போன்ற பயனுள்ள சுகாதாரச் செயல் முறைகள் மூலம் நடைமுறைப் படுத்துகிறது.

7. **பாதுகாப்புக் கவனிப்பும் காப்பும்** – முகாமைத்துவமும், பணியாளர்களும் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பிற்கு முதல் இடம் வழங்கி அதை உறுதிப் படுத்த செயல் முறைகள் வைத்திருக்கிறார்கள்.

8. **தரத்தை ஆதரிப்பதைச் செயல்படுத்த** – முகாமைத்துவம் பயனுள்ளதும் நன் நெறி சார்ந்ததும்.

தரப் பகுதிகள் பற்றிய மேலதிகத் தகவலுக்கு தயவு செய்து OSHCQA இன் *தரச் செயற்பாட்டு வழிகாட்டி* (2003) ஐப் பார்க்கவும்.

## OSHCQA இல் குடும்பங்களின் பங்கு

OSHCQA ஒவ்வொரு சேவையும் அதன் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து தொழிற் பட்டு அதன் தத்துவ ஞானக் கொள்கைகளையும், செயல்முறைகளையும் விருத்தி செய்வதையும், மீளாய்வு செய்வதையும் உற்சாகப் படுத்துகிறது. இவை சிறுவர்களுக்கும் பணியாளர்களுக்கிடையே உள்ள அனுபவங்களையும், பரிமாற்றங்களையும் சரிப்படுத்த உதவும்.

குடும்பங்கள் கீழ்படிதல், சுகாதாரம், சுற்றுலாக்கள், நோய் தடுக்கும் மருந்தேற்றல், சூரிய ரேகைப் பாதுகாப்பு, மற்றும் பாதுகாப்புப் போன்ற விடயங்களைச் சுதந்திரமாக அவர்களது பிள்ளையின் கவனிப்பாளர்களுடன் கதைக்கக் கூடியதாய் இருப்பதும் முக்கியம்.

OSHCQA குடும்பங்களையும் சமூக அங்கத்தவர்களையும் மையத்தின் நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதை உற்சாகப்படுத்துகிறது. இது சிறுவர்கள் சமூகத்தைப் புரிந்து கொள்ளவும் சமூகத் திறன்களை விருத்தி செய்யவும் உதவும்.

## தரமான சிறுவர் காப்பைப் பற்றிக் கூடுதலாய் அறிந்து கொள்வது ஏப்படி?

குடும்பங்கள் தரமான சிறுவர் கவனிப்பைப் பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்ள உதவ NCAC ஆர்வமாயுள்ளது. சிறுவர் காப்புத் தர உறுதிப்பாடு பற்றிய தகவல் NCAC இன் வலைத் தளத்தில் கிடைக்கும். QA பிரசுரங்களின் பிரதிகளும் சேவைகளில் கிடைக்கக் கூடியதாய் இருக்கும்.

ஒரு பாடசைலை வேளை புறம்பான காப்புச் சேவையினால் வழங்கப்படும் கவனிப்பின் தரத்தில் அக்கறையுள்ள குடும்பங்கள் இந்த விடயங்களைத் சேவையுடன் கலந்தாலோசிக்க உற்சாகப்படுத்தப் படுகிறது. தரமான சேவைகள் தெளிவானதும், வெளிப்படையானதுமான மனக்குறை மற்றும் முறையீடுகளைக் கையாளும் செயல்முறைகளை வைத்திருக்கும். நீங்கள் பாடசாலை வேளை புறம்பான காப்புச் சேவையின் தரம் சம்பந்தமான விடயம் ஒன்றில் அக்கறை எழுப்பியிருந்து அது இன்னும் தீர்க்கப்படாமல் இருந்தால் NCAC இடம் ஒரு முறையீட்டைக் கையாளும் செயல் முறை ஒன்று இருக்கிறது. இதன் பிரதி ஒன்றை எங்களது வலைத் தளத்தில் அல்லது NCAC ஐ தொலை பேசியில் தொடர்பு கொண்டு பெறலாம்.

சிறுவர் காப்பு மற்றும் தரமான சேவை ஒன்றைத் தெரிவு செய்யத் தேவையான மேலதிகத் தகவல்களுக்கு NCAC ஐ **1300 136 554** இல் அழைக்கவும்.

**அலுவலக நேரங்கள்:** திங்கள் தொடக்கம் வெள்ளி வரை – காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை. நியூ சவுத் வேல்ஸ் நேரம்

**தபால் முகவரி:** தட்டு 3, 418ஏ எலிசபெத் வீதி சறி ஹில்ஸ் சிட்னி நியூ சவுத் வேல்ஸ் 2010

**தொலை பேசி:** 1300 136 554 **தொலை நகல்:** (02) 8260 1901

**மின்னஞ்சல்:** qualitycare@ncac.gov.au

**வலைத் தளம்:** www.ncac.gov.au

**தொலை பேசி மொழிபெயர்ப்புச் சேவை** ஆங்கிலம் அல்லாத வேறு மொழி அழைப்புகளுக்கு –131 450

**தேசிய அஞ்சல் சேவை** செவிப் புலன் அல்லது பேச்சுப் பாதிப்படைந்தவர்களின் அழைப்புகளுக்கு – 131 677

## வேறு உபயோகமான தொடர்புகள்

**குழந்தைப் பராமரிப்பு ஊதியம்** – குடும்பங்களுக்கு உதவக் கொடுக்கப்படும் குழந்தை பராமரிப்புச் செலவுகள். குடும்ப ஆதார அலுவலகத்தை 136 150 இல் அழையுங்கள் அல்லது சென்டலிங் அல்லது மெடிக்கெயார் அலுவலகத்தை அழையுங்கள்.

**நேர்மையான வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்** – உங்களுக்கு குழந்தை பராமரிப்பு அல்லது ஒப்பந்தங்கள் பற்றிய ஏதும் அக்கறைகள் இருந்தால் நேர்மையான வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்களுக்குப் பொறுப்பாயுள்ள உங்களது மாநில அல்லது ஆள்புல இலாகாவைத் தொடர்பு கொள்ளுங்கள்.

© National Childcare Accreditation Council Inc - June 2005